**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-12/2022**

**List of Witness LW8 Examined as PW9 (Observation Mahazar)**

| | | | |
|---|---|---|---|
| Name | காமராஜ் | Caste: | |
| Father's name | சின்னையா | Calling: | விவசாயம் |
| Village | மணவாத்திப்பட்டி | Religion: | Hindhu |
| Taluk | கந்தர்வகோட்டை | Age: | 48 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07/06/2023.

(1 முதல் 4 எதிரிகள் ஆஜராகவில்லை, கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டுள்ளது)

முதல் விசாரணை

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது. 28.03.2021ம் தேதி காலை 10.00 மணியளவில் லட்சுமிபுரம் ஊரில் சம்பவம் நடந்த இடத்திற்கு பக்கத்து கொல்லையில் நான் வேலை பார்த்து கொண்டிருந்தேன். அப்போது போலீசார் வந்து, விசாரணை செய்தார்கள். அதற்கு சாட்சியாக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள், நான் கையெழுத்து செய்தேன். என்னுடன் வேறு யாரும் கையெழுத்து செய்தார்களா என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள். **(**பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1. இவ்வழக்கின் புகார்தாரர் நமச்சிவாயம் எனக்கு பங்காளி உறவுமுறை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் எனக்கு பட்டா இடம் இல்லை என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி கையெழுத்தை வெள்ளைதாளில் செய்தேன் என்றால் சரியல்ல, வரைபடத்தில் செய்தேன். மொத்தம் எத்தனை கையெழுத்து செய்தேன் என்றால் ஒரு கையெழுத்து செய்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக எந்த போலீஸ் அதிகாரி என்னை விசாரித்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை**.**

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-12/2022**

**List of Witness LW9 Examined as PW10    (Observation Mahazar)**

| | | | |
|---|---|---|---|
| Name | சண்முகநதி | Caste: | |
| Husband name | குமார் | Calling: | விவசாயம் |
| Village | மணவாத்திப்பட்டி | Religion: | Hindhu |
| Taluk | கந்தர்வகோட்டை | Age: | 44 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07/06/2023.

(1 முதல் 4 எதிரிகள் ஆஜராகவில்லை, கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டுள்ளது)

முதல் விசாரணை

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊரில் பெருமாளுக்கும் தரப்பினர்க்கும், வேறு ஒரு தரப்பினர்க்கும் சண்டை நடந்தது தொடர்பாக போலீசார் வந்து விசாரித்து கொண்டிருந்தார்கள். வயலில் கடலை கொடி பறித்து கொண்டிருந்தபோது, என்னிடம் சாட்சிக்காக கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1. இவ்வழக்கின் புகார்தாரர் நமச்சிவாயம் எனக்கு என்ன உறவுமுறை என்றால் ஊர்க்காரர். இவ்வழக்கில் சாட்சியாக இருக்கும்படி என்னை நமச்சிவாயம் அல்லது பெருமாள் அழைத்தாரா என்றால் போலீசார் தான் அழைத்தார்கள். என்னுடன் வேறு யார் கையெழுத்து செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் வரைபடத்தில் கையெழுத்து செய்தேன்.

2. எந்த வருடம், எந்த மாதம், எத்தனை மணிக்கு, போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, விசாரித்தார்கள், சம்பவத்திற்கு முதல் நாள் நடந்த சண்டையை சொன்னேன். இவ்வழக்கின் புகார்தாரர் எனக்கு உறவினர் என்பதால்

அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகில் எனக்கு பட்டா இடம் இல்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.